## கம்பு

1. அடிச்சாம்பல் நோய் : ஸ்கிலிரோஸ்போரா கிராமினிகோலா

அறிகுறிகள் : நோயினால் பாதிக்கப்பட்ட செடிகளில் கதிர்கள் வெளிப்படுவதில்லை. அவ்வாறு வெளிப்பட்டாலும் கதிர் முழுவதுமோ அல்லது கதிரின் ஒரு பாகமோ தானியங்களுக்குப் பதிலாகப் பசுமையான நீண்ட சிறிய இலை போன்ற வளர்ச்சியைக் கொண்டிருக்கும். ஆகவே கதிர்கள் தானிய மணி பிடிப்பில்லாமல் மலடாக இருக்கும். பூவிலுள்ள பகுதிகள் அனைத்தும் சிறிய இலைப்போன்ற பகுதிகளாக மாற்றப்படுகின்றன. கதிர்களில் தானியங்களுக்குப் பதிலாகப் பசுமை நிறத்தில் சிறுசிறு இலைப்போன்ற பாகங்கள் காணப்படுவதால் இந்நோய் "பசுங்கதிர் நோய்" என்று அழைக்கப்படுகிறது.

கட்டுப்பாடு

- நோய் எதிர்ப்புத்திறன் கொண்ட இரகங்களான கோ 7. டபிள்யூ சிசி - 75.
- நாற்றுப் பறித்து நடவு செய்தால் நோயின் தாக்கம் குறையும்.
- பாதிக்கப்பட்ட பயிரை நடவு செய்யும் போது பிடுங்கி எறியவும்.
- நேரடி விதைப்பு வயலில் பாதிக்கப்பட்ட பயிரை விதைத்த 45 வரை களைந்தெறியவேண்டும்.

- விதைகளை மெட்டாலக்சில் 6 கிராம் / கிலோ என்ற அளவிலும் அதனைத் தொடர்ந்து மெட்டாலக்சில் 500 கிராம் அல்லது (ரிடோமில் எம்இசட் 4 கிலோ / எக்டர் அல்லது மேங்கோசெப் 1 கிலோ / எக்டர் என்ற அளவில் பயன்படுத்தலாம்).

2. கம்பின் தேன் ஒழுகல் நோய் : கிளாவிசெப்ஸ் மைக்ரோசெஃபாலா

அறிகுறிகள்

- பூக்கும் தருணத்தில் இந்நோய் காணப்படுகின்றது.
- நோய்கள் தாக்கப்பட்ட கதிர்களிலிருந்து பழுப்பு நிறத்தில் இனிப்பான தேன் போன்ற திரவம் சொட்டு சொட்டாக வடிந்து கொண்டிருப்பதைக் காணலாம்.
- நோயுற்ற சில நாட்களில் இப்பகுதிகளில் திரவம் கெட்டியாகி அடாட பழுப்பு நிறத்தில் காய்ந்து விடுகின்றது.
- நாளடைவில் தானியங்களுக்கப் பதிலாகக் கெட்டியான கரும்பழுப்பு நிற 'எர்கட்' என்னும் இழை முடிச்சுகள் தோன்றுகின்றன. இவை தானியங்களை விடப்பெரியவையாகவும நீண்டும் காணப்படும்.
- இதில் உற்பத்தியாகும் ஸ்கிலிரோஷியா விதையை விட பெரியதாகவும் ஒழுங்கற்ற வடிவுடையதாகவும், கதிரடிக்கும் சமயத்தில் கதிருடன் கலந்தும் காணப்படுகிறது.

கட்டுப்பாடு

கார்பன்டாசிம் 500 கிராம் அல்லது திரம் 1000 மில்லியை அல்லது மாங்கோசெப் 1 கிலோ என்ற அளவில் 5-10 சதவிகித் பூக்கும் சமய்த்திலும்  மற்றும் 50 சதவிகிதம் பூத்த பின்பும் தெளிக்கலாம்.

துரு நோய் - பக்னீசியா ஸ்பெப்ட்ரியேட்டா

அறிகுறிகள்

- இலைகளின் மேல் சற்றே உயர்ந்த சொரிசொரியான பழுப்பு நிறப்புள்ளிகள் தோன்றுதல்.
- சிறிய சிவப்பு - பழுப்பு முதல் ஆரஞ்சு சிவப்பு நிறத்தில் வட்டவடிவ முதல் நீளவடிவ யுரினியா வித்துக்கள் இலைகளின் மேல் தோன்றும்.
- நோயின் தாக்கம் அதிகரித்தால், இலையின் திசு வாடியும் மற்றும் இறந்தும் காணப்படும்.
- நோய் மெதுவாக தாக்கினதல் யுரினியா வித்துக்கள் டீரியா வித்துக்களால் இடம்பெயர்க்கப்பட்டு விடுகின்றன.

கட்டுப்பாடு

- கரையும் கந்தகம் 2.5 கிலோ அல்லது மாங்கோசெப் 1 கிலோ என்ற அளவில் பயன்படுத்தலாம். இதை 10 நாள் / எக்டர் கழித்து திரும்பவும் தெளிக்கவும்.
- டிசம்பர் முதல் மே வரைக்குள் விதைப்பு மேற்கொண்டால் இந்நோயின் தாக்கம் குறையும்.
- தரைக்கதிர் பூசணநோய் - வெவ்வேறு வகையான பூசணத்தால் ஏற்படுகின்றது.

(உதாரணம் : ஆஸ்பர்ஜில்லஸ், ஹெல்மின்தோஸ்போரியம், ஆல்டர்னேரியா, கர்வுலேரியா, ப்யூசேரியம்)

அறிகுறிகள்

1. தானியத்தின் மேல் வெவ்வேறு நிறங்களைக் கொண்ட பூசணங்கள் வளர்கின்றன.
2. தானியங்கள் உருவாகும் போதும் அல்லது அறுவடை தாமதமாகும் போதும், ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் இவ்வகையான நோய்கள் ஏற்படுகின்றன.
3. இவ்வகையான பூசண வளர்ச்சி இடத்திற்கு இடம், சாகுபடிக்கு ஏற்றவாறும், சூழ்நிலை காரணிகளுக்கு ஏற்றவாறும் மாறி வளர்கின்றன.
4. இவ்வகையான பூசண வளர்ச்சி இடத்திற்கு இடம், சாகுபடிக்கு ஏற்றவாறும், சூழ்நிலை காரணிகளுக்கு ஏற்றவாறும் மாறி வளர்கின்றன.

கட்டுப்பாடு

1. மேங்கோசெப் 1 கிலோ / எக்டர் அல்லது கேப்டான் 1 கிலோ + ஆரோபஞ்சிசால் 100 கிராம் / எக்டர் என்ற அளவில் தெளிக்கலாம்.
2. தெளிக்கும் சமயத்தில் மழை பெய்தால் ஒரு வாரம் கழித்து தெளிக்கலாம்.
3. பைபோலாரிஸ் இலைப்புள்ளி நோய் - பைபோலாரிஸ் சேடேரியே

அறிகுறிகள்

1. இலைகளில் பழுப்பு நிறத்தில் காயங்கள் போன்று புள்ளிகள் தோன்றும். வரிக்கோடுகள், சிறிய நீள்வடிவ புள்ளிகள், பெரிய ஒழுங்கற்ற புள்ளிகள் ஆகியன தோன்றும்.
2. இலைகளில் பெரிய அளவிலான கோடுகள், கருகல் தோன்றும். இவ்வகை கோடுகள் ஒன்று சேர்ந்து பெரிய கருகல் போன்ற தோற்றத்தைக் கொடுக்கும்.

கட்டுப்பாடு

1. விதையை கேப்டான் 2 கிராம் / திரம் 2 கிராம் / கிலோ அளவில் நேர்த்தி செய்யலாம்.
2. மேங்கோசெப் 1 கிலோ / எக்டர் என்ற அளவில் தெளிக்கலாம்.

செர்கோஸ்போரா இலைப்புள்ளி நோய் : செர்கோஸ்போரா பென்னிசிட்டி

அறிகுறிகள்

இலைகளின் விளிம்புகளின் நிறக்கோடுகள் போன்று தோன்றும், பின்பு இவ்வகையான புள்ளிகளின் மத்திய பகுதி வெண்மையாகவும், வெளிர்ந்த நிறமுமையதாகவும் காணப்படும். இவ்வகையான கோடுகள் தண்டுகளிலும் காணப்படும்.

கட்டுப்பாடு

மேங்கோசெப் 1 கிலோ / எக்டர் என்ற அளிவல் தெளிக்கலாம்.

கர்வுலேரியா இலைப்புள்ளி : கர்வுலேரியா பென்னசிட்டி

அறிகுறிகள்

சிறிய மஞ்சள் பழுப்பு நிறமுயை இலைப்புள்ளிகள் தோன்றி பெரிய புள்ளிகளாக மாறும். புள்ளியின் மத்தியப் பகுதி பழுப்பு நிறமாக மாறும் மற்றும் விளிம்புகள் மஞ்சள் நிறமாக இருக்கும். இலைக்கருகல் கோடுகள் பொதுவாக இலையின் விளிம்புகளில் காணப்படும்.

கட்டுப்பாடு

மேங்கோசெப் 1 கிலோ / எக்டர் என்ற அளவில் தெளிக்கலாம்.

பைரிகுலேரியா இலைப்புள்ளி - பைரிகுலேரியா கிரிசியா

அறிகுறிகள்

இலைகளின் மேல் நீள்வடிவ அல்லது வைரத்தைப் போன்ற வடிவுடைய புள்ளிகள் தோன்றும்.

இப்புள்ளிகளின் மத்தியப் பகுதி சாம்பல் நிறத்திலும், முதலில் புதிதாகவம் மென்மையாகவும், பின்பு காய்ந்தவுடன் பழுப்பு நிறத்திலும் காணப்படும். இலைப்புள்ளிகளின் வித்துக்கள் இறந்தும், பார்ப்பதற்கு சிறுசிறு வளையங்கள் போன்று தோன்றும்.

கட்டுப்பாடு

மேங்கோசெப் 1 கிலோ / எக்டர் என்ற அளிவல் தெளிக்கலாம்.